நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன்னுள்ள கேள்வி —

" கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 85,31,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

5. அறிவிப்பு.

தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 3) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை, இந்தப் பேரவைக்குக் கொண்டு வருவதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த மசோதாவை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருவார்கள்.

6. அரசினர் மசோதா.

தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 3) மசோதா.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண். 3) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.